1979 ஏப்ரல் 24]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தென் பெண்ணையின் வலது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் ஏற்கெனவே கட்டப் பட்டுள்ளன. 1977-ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தினால் அவை பழுதடைந்தன. அவற்றை சீரமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நீலகிரியில் மலர்க்காட்சி, பழக்காட்சி.

* வினா எண். 798—திரு. போ. கோபாலன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊட்டியில் நடைபெறும் மலர்க்காட்சி, குன்னூரில் நடைபெறும் பழக்காட்சி ஆகிய நிகழ்ச்சிகளை அரசே ஏற்று நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஆம்.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவரவர்களே, ஊட்டியில் நடைபெறுகின்ற மலர்க் காட்சி, குன்னூரில் நடைபெறும் பழக்காட்சி ஆகிய இரண்டையும் அரசின் சார்பிலே எடுத்து நடத்துகின்ற உத்தேசம் இந்த ஆண்டு முதல்தான் அமுலுக்கு வரும் என்று சொல்லப்பட்டது. ஆனால் இதற்கு முன்பு யார் அதனை நடத்தினார்கள்? அவ்வாறு தனியார்கள் நடத்துகின்ற போது தவறுகள் நடந்திருக்கின்றது என்று சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவரவர்களே, கடந்த 1978-ம் ஆண்டு வரையிலும் நீலகிரி விவசாய தோட்டக்கலை சங்கத்தினர் ஆண்டுதோறும் அந்த மலர்க்காட்சியையும், பழக்காட்சியையும் நடத்தி வந்தனர். ஒவ்வொரு ஆண்டிலும் ஏறத்தாழ மலர்க்காட்சி நடத்தியதன் மூலமாக 40 ஆயிரம் ரூபாய்க்கு மேலாக இலாபம் கிடைத்துள்ளது. பழக்காட்சி நடத்தியதன் மூலமாக ஏறத்தாழ 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 6 ஆயிரம் ரூபாய் வரையிலும் அவர்களுக்கு இலாபம் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டிலே இருந்து அவற்றை அரசே எடுத்துக் கொள்ளலாமா என்பது குறித்து அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. கடந்த ஆண்டு 1978லே மலர்க்காட்சியைத் திறந்து வைத்த நேரத்தில், மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் இங்கு வருகின்ற வருமானம் தனிப்பட்ட ஒரு ஸ்தாபனத்திற்குச் செல்கிறதே, அந்தப் பணத்தை அரசாங்கத்திற்கு வருகின்ற சூழ்நிலையை உருவாக்கக் கூடாதா என்ற கருத்தினைத் தெரிவித்

தார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலேதான் இந்த மலர்க் காட்சியையும், பழக்காட்சியையும் நாமே எடுத்து நடத்தலாமா என்று அரசு பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

(முற்பகல் 9—50.)

திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மலர்க் கண்காட்சிக்கு வருடம் ஒன்றுக்கு எத்தனை பேர்கள் பார்வையாளர்களாக வருகிறார்கள்? கொடைக்கானலில் இந்த மலர்க் கண்காட்சியை நடத்துவதற்கு அரசுக்கு உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, வருடம் ஒன்றுக்கு ஏறத்தாழ 60,000 பேர்கள் அந்த மலர்க் கண்காட்சியைக் காண வந்திருக்கிறார்கள். பழக் கண்காட்சிக்கு ஏறக்குறைய 12,000-க்கு மேற்பட்டவர்கள் வந்திருக்கிறார்கள். கொடைக்கானலைப் பொறுத்த வரையில் இது போன்ற மலர்க் கண்காட்சி, பழக் கண்காட்சியை ஏற்படுத்தலாமா என்பதை அரசு இனிமேல் பரிசீலனை செய்யும்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, நீலகிரி, கொடைக்கானல் ஆகிய இடங்களில் நடத்துவதைபோல், எங்களுடைய வட ஆற்காட்டில் உள்ள ஏலகிரி மலையிலும், சேலத்தில் உள்ள ஏற்காடு மலையிலும் இப்பேர்ப்பட்ட மலர்க் கண்காட்சி,பழக் கண்காட்சிகளை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: ஏலகிரி மலையிலும், ஏற்காடு மலையிலும் நடத்துவதற்கு, சுற்றுலா பயணிகள் வரக்கூடிய ஸ்தலமாக இருக்குமா என்று ஆராய்ந்து பார்த்து, பிறகு முடிவு எடுக்க முடியும். ஆகவே, அதைப் பார்த்து இதற்கு விடை பின்னால் சொல்கிறேன்.

கிழக்கு இராமநாதபுரத்தில் பனைத் தொழில்கள்.

*வினா எண். 799—திரு. வ.மு. சுப்பிரமணியன்: மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கோடிக்கணக்கான பனைமரங்களிலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்களை உபயோகப்படுத்தும் வகையில் குடிசைத் தொழில் ஏற்படுத்தும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் ஏதேனும் உள்ளதா?